# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோவில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண். 24347590

**ஆணை நாள் – 11.11.2020**

**முன்னிலை**

**திரு. சு.முத்துராஜ், பி.ஏ., பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 2886/D/2020**

திரு L.S. அன்வர் --- மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் / மேலாளர்,
காயல்பட்டினம் நகராட்சி, தூத்துக்குடி மாவட்டம். --- பொது அதிகார அமைப்பு

பார்வை:

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1)-ன்கீழ் மனு செய்த நாள் | 10.12.2019 |
| பொதுத் தகவல் அலுவலர் பதில் அளித்த நாள் | 09.01.2020 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 05.02.2020 |
| முதல் மேல்முறையீட்டு அலுவலர் பதில் அளித்த நாள் | 24.02.2020 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 07.03.2020 |

****

**ஆணை**

தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் நேரடியாக விசாரணை செய்ய இயலாததால், இன்று (11.11.2020) தொலைபேசி வாயிலாக தொடர்புகொண்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மனுதாரர் திரு L.S. அன்வர் மற்றும் பொதுத் தகவல் அலுவலர் திரு. ரவிச்சந்திரன், மேலாளர், காயல்பட்டினம் நகராட்சி, தூத்துக்குடி மாவட்டம் இன்றைய தொலைபேசி விசாரணையில் பங்கேற்றனர்.

2. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் காயல்பட்டினம் நகராட்சி அலுவலகப் பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், காயல்பட்டினம் நகராட்சியால் ஒப்பந்த அடிப்படையில் ஒருவருக்கு எத்தனை ஒப்பந்தப் பணிகள் கொடுக்கப்பட்டு எத்தனை பணிகள் முடிக்கப்பட்டன என்பதை பற்றிய முழு விவரம், இவர் எத்தனை ஆண்டுகளாக ஒப்பந்ததாரராக இருந்து வருகிறார் என்ற விவரம், இவருக்க கொடுக்கப்பட்ட ஒப்பந்தப்பணிகளை முடிக்காமல் இருப்பது குறித்து புகார்கள் இருக்கும்பட்சத்தில் இவரது உரிமத்தை ரத்து செய்யாமல் மீண்டும் இவருக்கு ஒப்பந்தப்பணிகள் ஒதுக்க காரணம் என்ன என்பதை பற்றிய முழு விவரம், நகராட்சி பொறியாளர் பிரிவில் பணிபுரியும் ஒருவர் எத்தனை ஆண்டுகளாக அதே பணியில் இருக்கின்றார் என்பதை பற்றிய முழு விவரம், நகராட்சியால் போடப்பட்ட சோலார்

பிளாண்ட் யாருடைய அனுமதியுடன் போடப்பட்டது என்ற முழு விவரம், நகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வரும் வரவு செலவுகள் தொடர்பான முழு விவரம் உள்ளிட்ட விவரங்களை மொத்தம் 12 இனங்களில் தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் மேற்குறிப்பிட்டவாறு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1) மற்றும் 19(3)-ன் கீழான தனது முதல் மற்றும் இரண்டாவது மேல்முறையீட்டு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளார். மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு இன்று (11.11.2020) தொலைபேசி வாயிலான விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய தொலைபேசி வாயிலான விசாரணையில் பங்கேற்ற மனுதாரர், தனக்கு முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை என்றும், தனது மனுவில் கோரிய காயல்பட்டினம் நகராட்சியின் மூலமாக சாலை அமைக்கப்பட்டது தொடர்பாகவும், இதர பணிகளுக்காகவும் எவ்வளவு நிதி செலவிடப்பட்டது என்றும் இப்பணிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட வரவு செலவினங்கள் மற்றும் நகராட்சி பொறியாளர் பிரிவில் பணிபுரியும் திரு. செந்தில் என்பவர் எதன் அடிப்படையில் இவ்வலுவலகத்தில் பணிபுரிகின்றார் என்ற விவரங்களை தனக்கு தகவல்களாக பெற்று வழங்குமாறும் தெரிவித்தார். விசாரணையில் பங்கேற்ற பொதுத் தகவல் அலுவலர், திரு. செந்தில் என்பவர் உயர்நீதிமன்ற உத்தரவின்படி பணியமர்த்தப்பட்டதாக பொதுத்தகவல் அலுவலர் தெரிவித்தார்.

5. இன்றைய தொலைபேசி வாயிலான விசாரணையின் முடிவில், மனுதாரர் மனுவில் கோரிய தகவல்களான திரு.செந்தில் என்பவர் பணியமர்த்தப்பட்டதற்கான உயர்நீதிமன்ற உத்தரவின் நகல், சாலை அமைக்கப்பட்ட பணிகள் மற்றும் இதர பணிகள் தொடர்பாக செலவிடப்பட்ட நிதியின் விவரம், இப்பணிகளுக்காக மேற்கொள்ளப்பட்ட வரவு செலவு தொடர்பான ஆவணங்களை, 25.11.2020 அன்று பிற்பகல் 3.00 மணிக்கு மேலாக காயல்பட்டினம் நகராட்சி அலுவலகத்திற்கு நேரடியாக சென்று, தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 2(j)-ன்படி ஆய்வு செய்து பெற்றுக்கொள்ள மனுதாரர் அறிவுறுத்தப்படுகிறார். அவ்வாறு மனுதாரர், காயல்பட்டினம் நகராட்சி அலுவலகத்தை அணுகும் பட்சத்தில், மனுதாரர் கோரிய ஆவணங்களை கட்டணமின்றி வழங்க காயல்பட்டினம் நகராட்சி அலுவலகப் பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடப்பட்டு, இம்மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை இவ்வாணையம் இத்துடன் முடித்துக் கொள்கிறது

**ஒம்/- (சு. முத்துராஜ்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 2886/D/2020</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுத் தகவல் அலுவலர் / மேலாளர்,
காயல்பட்டினம் நகராட்சி,
தூத்துக்குடி மாவட்டம்.

**<u>மனுதாரர்:-</u>**

திரு L.S. அன்வர்,
எண்.10, ஆஸாத் தெரு,
காயல்பட்டினம் - 628 204.

Copy to: File
SNPA 13.11.2020